www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## முதலாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2023

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் Hindu Culture | Three Hours 10 min / Gr -12 (2024) | 46 | T | I,II |

### பகுதி I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. சிந்துவெளியில் புதைபொருளாய்வு இடம் பெற்ற காலம்
1) 1922 தொடக்கம் 1930 வரை
2) கி.மு 3250 தொடக்கம் கி.மு 2750
3) 500 ஆண்டுகளுக்கு முன்னர்
4) கி.பி 3250 தொடக்கம் கி. பி 2750
5) 1720 தொடக்கம் 1830 வரை

02. உருத்திரனுக்கு பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையை அறிமுகம் செய்த வேதம்
1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வணம் 5) வேதாங்கம்

03. சிவாகமங்கள் கூறும் பாதங்களில் அதிகமான தத்துவக்கருத்துக்களை கொண்டமைந்த பாதம்
1) சரியா பாதம் 2) கிரியா பாதம் 3) யோக பாதம்
4) ஞான பாதம் 5) சரியா பாதமும் கிரியா பாதமும்

04. வேத இலக்கியங்களின் விரிவுபட்ட நெறியாகக் கருதப்படும் இதிகாசம்
1) இராமாயணம் 2) சிவரகசியம் 3) மகாபாரதம் 4) புராணம் 5) தர்ம சாத்திரம்

05. உலக தோற்றம் பற்றி குறிப்பிடும் பஞ்சலட்சண பகுதி
1) சர்க்கம் 2) பிரதி சர்க்கம் 3) வம்சம்
4) மனுவந்தரம் 5) வம்சானு சரிதம்

06. பாலை நிலத் தெய்வமாக போற்றப்படுவது
1) சிவன் 2) முருகன் 3) வருணன் 4) இந்திரன் 5) கொற்றவை

07. சிவனுக்குரிய ரதக் கோயிலாக அமைவது
1) சகாதேவரதம் 2) தர்மராஜ ரதம் 3) வீம ரதம் 4) கணேஷ ரதம் 5) நகுல ரதம்

08. சோழ அரசர்களது சின்னமாக விளங்குவது
1) நந்தி 2) புலி 3) நடரசார் 4) கழுகு 5) பசு

09. திருஞான சம்பந்தர் இறைவனைப் போற்றிய மார்க்கம்
1) தாச மார்க்கம் 2) சற்புத்திர மார்க்கம் 3) சக மார்க்கம்
4) சன் மார்க்கம் 5) மதுர மார்க்கம்

10. வேத, ஆகம கல்வி மரபு பரவகாரணமாக அமைந்தது.
1) பிரம தேயம் 2) அக்கிரகாரங்கள் 3) கடிகைஸ்தானம்
4) மங்களாசனம் 5) திவ்ய தேசங்கள்

11. பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் பற்றி குறிப்பிடும் புராணம்.
1) கந்த புராணம் 2) பெரிய புராணம் 3) கூர்ம புராணம்
4) சிவ புராணம் 5) கருட புராணம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. மகாபாரதத்தின் ஒரு பகுதியாக அமைவது
    1) இராமாயணம் 2) சிவரகசியம் 3) திருமந்திரம்
    4) பகவத்கீதை 5) விஷ்ணு சிந்தியம்

13. வீர சைவக் கோட்பாடடைக் கூறுகின்ற புராணம்
    1) பசவ புராணம் 2) காஞ்சி புராணம் 3) சேது புராணம்
    4) தணிகைப் புராணம் 5) அருணாசல புராணம்

14. உலக ஒழுங்கு மனிதர்களின் ஒழுக்கம் போன்றவற்றை கண்காணிக்கும் இருக்கு வேத தேவர்
    1) இந்திரன் 2) சூரியன் 3) வருணன்
    4) விஷ்ணு 5) உருத்திரன்

15. சிவாகமங்களில் உருத்திர பேதம் எத்தனை
    1) 28 2) 10 3) 207 4) 100 5) 18

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A** நந்திக் கொடி | **F** கேது | **K** 6000 பாடல்கள் | **P** விருத்தி |
| **B** சர்க்கம் | **G** சுப தந்திரம் | **L** தேவரடியார் | **Q** வெறியாட்டு விழா |
| **C** சாத்திரங்கள் | **H** மாந்திரிகம் | **M** கர்ஷணம் | **R** பிடாரர்கள் |
| **D** பிரமவேதம் | **I** வேத விருத்தி | **N** முக்தி | **S** நீண்ட ஆயுள் |
| **E** பாணர் | **J** வேந்தன் | **O** நடுகல் வழிபாடு | **T** பிரதிஷ்டை |

16. சோழர் காலத்தோடு தொடர்புடைய தொகுதி
    1) B, F, L, S 2) A, I, L, R 3) C, J, O, R 4) D, H, M, T 5) E, G, L, Q

17. வடமொழி புராணங்களோடு தொடர்புடைய தொகுதி
    1) B, F, N, P 2) E, I, K, P 3) D, F, N, T 4) B, J, D, S 5) A, I, O, S

18. சிவாகமங்களோடு தொடர்புடைய தொகுதி
    1) C, H, L, S 2) A, J, M, T 3) B, I, N, P 4) D, H, L, R 5) C, G, M, T

19. அதர்வண வேதத்தோடு தொடர்புடைய தொகுதி
    1) A, F, L, Q 2) B, H, N, R 3) D, H, K, S 4) C, J, O, Q 5) A, G, M, R

20. சங்க காலத்தோடு தொடர்புடைய தொகுதி
    1) E, H, O, S 2) B, H, M, S 3) C, I, M, R 4) E, J, O, Q 5) A, G, M, R

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21. சிந்துவெளிக் காலம்
    1) கி.மு 3250 தொடக்கம் கி.மு 2750 வரையான காலம்
    2) 1922 தொடக்கம் 1930 வரையான காலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
    3) ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது.
    4) சித்திர வடிவ எழுத்துக்கள் கண்டு பிடிக்கப்பட்டது.
    5) மொகஞ்சதரோ இந்தியாவில் உள்ளது.

22. மகாபாரதம்
    1) குப்த ஆட்சிக் காலத்தில் இறுதி வடிவம் பெற்றது.
    2) 18 பருவங்களைக் கொண்டது.
    3) சிவ பரத்துவம் விளக்கப்படுகின்றது.
    4) ஐந்தாம் வேதமென போற்றப்படுகின்றது.
    5) ஆதி பர்வம் தொடக்கம் மோட்ச பர்வம் வரை உள்ளது.

23. சங்க காலம்
    1) கி.பி 1ம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம்
    2) பாவை நோன்பு இடம் பெற்றது.
    3) கொற்றவை வழிபாடு இடம் பெற்றது.
    4) நடராசர் வழிபாடும் சிறப்பாக இடம் பெற்றது.
    5) நடுகல் வழிபாடு, முருக வழிபாடு காணப்பட்டது.

24. சிவாகமங்கள்
    1) அறிவு எனப் பொருள்படும்.
    2) இந்து சமயத்தின் சிறப்பு நூலாகும்.
    3) சிவாகமங்கள் 28 ஆகும்.
    4) ஆலயம் அமைக்கும் முறை பற்றி விளக்குகின்றது.
    5) இறைவனினால் அருளப்பட்டது.

25. புராணங்கள்
    1) குப்தர் காலத்தில் தோற்றம் பெற்றது.
    2) பழமை வாய்ந்தது என்ற பொருள்படும்.
    3) நண்பர்களைப் போல் அறிவுரை கூறும் நூல்.
    4) திராவிடர்களினால் தோற்றுவிக்கப்பட்டது.
    5) பஞ்சலட்சணங்கள் பற்றியும் கூறுகின்றது.

(25 x 4 = 100 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் இருபது புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

**01. சிவாகமங்கள் இந்துநாகரிகத்தை வளப்படுத்திய முறைமையை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.**

அ) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்
ஆ) தத்துவ சிந்தனைகள்
இ) சிறப்புக்கள்
ஈ) திருக்கோயில் வழிபாடு

(5+5+5+5=20 புள்ளிகள்)

**02. தமிழகத்தில் பல்லவர் காலத்தில் ஏற்பட்ட இந்து பண்பாட்டு வளர்ச்சியினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.**

அ) அரசியல் சமூக சூழ் நிலை
ஆ) அரசர்களின் பங்கும் பணியும்
இ) நாயன்மார்களின் பங்களிப்பு
ஈ) திருக்கோயில்களின் வளர்ச்சி

(5+5+5+5=20 புள்ளிகள்)

**03. இந்து நாகரிகத்தை வளப்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.**

அ) பஞ்ச இலட்சணங்கள்
ஆ) புராணங்களின் வகைகள்
இ) வழிபாட்டு முறைகள்
ஈ) தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

**04.** நாகரிகம் பண்பாடு என்பவற்றினை விளக்கி இந்து நாகரிகத்தின் சிறப்புக்களை விரிவாக கூறுக.

(20 புள்ளிகள்)

**05.** இந்து சமுதாயத்தில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)

**06. "இந்து பண்பாட்டினை வளப்படுத்திய வகையில் சிந்து வெளிகாலம் சிறப்பானதாகும்" இக் கூற்றினை ஆதாரமாக கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக.**

அ) நுண்கலைகள்
ஆ) சமுதாய நிலை

(10 + 10 = 20 புள்ளிகள்)

**07. இந்து சமயத்தின் முதல் நூல் என்ற வகையில் வேதங்கள் பெறும் இடத்தினை மேல் வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.**

அ) வேதங்களின் வகையும் அமைப்பும்
ஆ) சமய மரபு

(10 + 10 = 20 புள்ளிகள்)

**08.** சங்க கால சமய நிலை பற்றி விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!